# கேள்வி:

மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது

குறைந்த பட்சம் சொல்லப்போனால் எறும்புகளைப்பற்றிய உன் தொகுப்பு மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது. முடியுமானால், நேரம் எடுத்து பின் வரும் கருத்துக்களை எனக்கு தயவு செய்து விளக்கு:

(1) பூமியின் மீது மிகவும் நுண்ணறிவுள்ள படைப்பு எறும்பு தான் என்பது உண்மையா (மனிதனைத்தவிர, நிச்சயமாக. அவர்கள் எறும்புகளைவிட நுண்ணறிவு உள்ளவர் என நீ நம்புவதாக நான் எடுத்துக்கொள்கிறேன்)? குர்'ஆனின் ஒரு வாக்கிய பகுதியின் பிரகாரம், எறும்புகள் மக்களிடையே வேறுபாடு காணுவது மட்டுமின்றி, அவைகள், எங்களை பெயர் சொல்லி அழைக்கவும் இயலும். மிகவும் உருமாறிய மனித குரங்கு (Aps) வம்சத்தினருக்கும் எங்களை பெயர் சொல்லி அழைக்கும் திறமை கிடையாது.

(2) உன் கூற்றுப்படி, எறும்புகள் மனிதனைப்போலவே நுண்ணறிவு உடையவராயின், அவைகளுக்கு உயிர் ஆத்மா உள்ளதுடன், அவைகளுக்கு சரி என்ற அறிவும், தவறு என்ற அறிவும் உள்ளதா? இஸ்லாமிய சட்டப்படி, "நல்ல" எறும்புகள் சொர்க்கத்திற்கும், "கெட்ட" எறும்புகள் நரகத்திற்கும் சென்றடையுமா?

---

# பதில்:

## பிராணிகளுக்கு நீதி

மனிதனை ஒத்திருக்கும் ஒரு பிராணியோ அல்லது ஒரு புழுப்பூச்சியோ, எறும்பு தான் என இன்று நாம் அறியப்பட்டிருக்கின்றோம். எறும்புகள், மனிதனைப்போலவே தன் இறந்த எறும்புகளை புதைக்கின்றன.

அவைகளிடம் மதிநுட்பமான, அதிநவீன வேலைப்பிரிவுகளுண்டு. அவர்களிடம், மேலாளர் (Manager), மேற்பார்வையாளர் (Supervisor), பணியாளர் (Worker) என பிரிவுகள் உண்டு. அவை சில நேரம் குழுவாக சேர்ந்து உரையாடும். அவைகளிடம் வியக்கத்தக்க, நுட்பமான செய்தித்தொடர்பு முறை உண்டு. பண்டம் மாற்றிக்கொள்ள அவர்களுக்கு வர்த்தக சந்தையும் உண்டு. பனிக்காலத்தில் அவை சேகரிக்கும் தானியங்கள் முளைக்க ஆரம்பித்தால், தானியங்கள் அழுகிவிடக்கூடும் என அறிந்து முளைக்கும் அம்மொட்டுக்களை எறும்புகள் வெட்டிவிடும். மழைக்காலத்தில்

தானியங்கள் நனைந்து விட்டால், வெயிலில் காயப்போட அவை தம் பொந்துகளிலிருந்து வெளிக்கொணறும். ஏதோ ஈரம் தானியங்கள் வேர்விட்டு வளர்வதையும் அதனால் தானியங்கள் அழுகிப்போவதையும் அவை அறிந்திருப்பது போல், எறும்புகள் அவ்வாறு தானியங்களை வெளியே கொண்டு வந்து காய வைப்பதை நிச்சயமாக பார்த்திருப்பாய். ஆக, 1400 வருடங்கள் முன்பே எறும்புகளின் நுட்பமான அறிவைப்பற்றி அல்-குர்'ஆன் கூறியிருக்கிறது.

இவ்வுலகில் வாழும் ஒவ்வொன்றுக்கும் "உயிர்" உள்ளது. அல்-குர்'ஆன் பிரகாரம் இவ்வுலகில் காணப்படும் ஒவ்வொன்றும் இறைவனின் துதிப்பாடுகிறது, இறைவனை பிரார்த்திக்கிறது. ஓவ்வொன்றும். மனிதனையும் ஜின்னையும் தவிர வேறு எந்த படைப்புக்கும் நல்லதையும் கெட்டதையும் வேறுபடுத்தக்கூடிய நுண்ணறிவு அல்லாஹ்வினால் கொடுக்கப்படவில்லை.

பிடித்து வளர்த்து பழக்கப்பட்ட கால்நடைகளும், மிருகங்களும், பிராணிகளும், தன் எஜமானரையும் மற்றவரையும் நன்கு அறியும். தெரு நாய்கள் கூட யார் அவைகளை விரட்டியடிக்கின்றான், யார் அவைகளை ஊட்டிவிடுகின்றான் என்பதை நன்கு அறியும். பண்ணையிலும் வீடுகளிலும் வளர்க்கப்படும் இறைச்சிப்பறவைகள் கூட தன் மாஸ்டரை அறிவதுடன், தத்தம் இருப்பிடத்தையும் அறியும். தேனீக்கள், அவை கூடு கட்டிய இடத்தையும், அவைகளை வளர்ப்பவர்களையும் அறியும்.

அல்-குர்'ஆன் அத்தியாயம் 24, வசனம் 41 - ல் அல்லாஹ் கூறியிருப்பதாவது :

"(நபியே!) நீர் பார்க்கவில்லையா? வானங்களிலும் பூமியிலும் உள்ளவையும், பறவைகள் (விண்ணில் தங்கள்) இறக்கைகளை விரித்(துப் பறந்)த வண்ணமாக நிச்சயமாக அல்லாஹ்வைத் தஸ்பீஹு செய்(து துதிக்)கின்றன; ஒவ்வொன்றும் தன் தொழுகையையும், (அல்லாஹ்வை) தஸ்பீஹு செய்யும் வழியையும் திட்டமாக அறிந்தே இருக்கிறது - அல்லாஹ்வும் அவை செய்பவற்றை நன்கறிந்திருக்கிறான்."

மேற் குறிப்பிட்ட வசனத்திலிருந்து உலகில் இருக்கும் அனைத்தும் அல்லாஹ்வை பிரார்த்திக்கிறது என்பது தெளிவாகிறது. சாலமன் (சுலைமான் அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தூதராக்கப்பட்டு, அக்காலத்தில் வாழ்ந்த அனைவருக்கும், ஜின், பிராணிகள், பறவைகள், புழுப்பூச்சிகள் ஆகியவைகளை சேர்த்து, அனைவரின் அரசராக நியமிக்கப்பட்டதால், அவைகளின் மொழியையும் சுலைமான் தெரிந்தவராக இருந்தார். ஆக, அனைத்து ஜின்களும், பிராணிகளும், பறவைகளும் புழுப்பூச்சிகளும் தமக்கு நபியாகவும், அரசனாகவும் சுலைமான் இருப்பதை அறிந்து, அவருக்கு அடிபணிந்தனர்.

ஆகவே, எறும்புகள் சாலமன் (சுலைமான் அலைஹிஸ்ஸலாம்) அவர்களை அடையாளங்கண்டு அவர் பெயரை உச்சரிப்பது, ஒரு முஸ்லிமுக்கு ஒன்றும் ஆச்சரியமானதல்ல. இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு உயிரினமும் தன்

பிரார்த்தனையில் அல்லாஹ்வின் பெயரை தன் மொழியில் உச்சரிக்கும் பொழுது, எறும்புகளால், சாலமன் (சுலைமான் அலைஹிஸ்ஸலாம்) உடைய பெயரை தன் மொழியில் உச்சரிக்க ஏன் முடியாது என நீ நினைக்கிறாய்? ஆங்கிலத்தில் நாம் சாலமன் என உச்சரிப்பதை, அரபிக் மொழியில் சுலைமான், என்றும், ஈவ் என்பதை ஹவ்வா என்றும், ஜேகப் என்பதை யாகூப் என்றும், டேவிட் என்பதை தாவூத், ஜோனாஹ் என்பதை யூனுஸ் என்றும் கூறும் பொழுது, பறவைகளின் மொழியில், அவைகள் புரிந்து கொள்ளும் வகையில், சாலமன் அழைக்கப்பட்டும், எறும்புகள் புரிந்து கொள்ளும் விதத்தில் சாலமன் என்பதற்கு ஏதாவது ஒரு ஒலி அல்லது வாசனை இருந்திருக்கும். எறும்புகள் சாலாமனுடன் அவர் பெயரைச்சொல்லி உரையாடாமல் தனக்குள்ளேயே உரையாடியதை நீ கவனத்தில் கொள்ளவேண்டும்.

பிராணிகளுக்கும், புழுப்பூச்சிகளுக்கும் தமக்கே உரிய ஒரு போக்கு உள்ளது. அவைகளுக்குள் "நல்லது", "கெட்டது" என்று ஒன்றும் கிடையாது. அதன்படி, தன் இன விருத்திக்கு அவை தன்னை பெற்றவருடனும், உடன் பிறந்த சகோதர, சகோதரி பிராணி, புழுப்பூச்சிகளுடனும் புணரும். சில பூச்சிகளும் பிராணிகளும், தான் பெற்றெடுத்த வம்சத்தினரையே கொன்று தின்றுவிடும். ஒரு இனத்தை சேர்ந்த பெரிய மீன், சிறிய மீனை, கடித்து குதறி அல்லது, முழுசாக விழுங்கிவிடுகிறது. ஒரு பூனை, தான் பெற்ற குட்டிகளில் ஒன்றை தின்றுவிடுகிறது.

இருப்பினும், மறுமை நாளன்று, அல்லாஹ் அனைத்து படைப்புகளையும் அவர்களுக்கு அவர்களின் பலன் கொடுக்க மீண்டும் படைப்பான். அந்த பெரிய நாளின் நீதி நேர்மையான, நியாயமான அரசனாக இருக்கப்போவதால், ஒரு பிராணியால் அடுத்த பிராணிக்கு நீதிக்கு புறம்பாக இழைக்கப்பட்ட சிறிய இம்சைக்கும் அநியாயத்திற்கும், அல்லாஹ்வினால் சரியான நீதி வழங்கப்படும். அவ்வரிசையில், கொம்புள்ள ஒரு ஆடு, கொம்பு இல்லாத மற்றொரு ஆட்டை முட்டியிருந்தால், பாதிக்கப்பட்ட ஆட்டிற்கு கொம்பு கொடுக்கப்பட்டு, தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு பழி வாங்கும்படி செய்யப்படும். பிறகு அவை அனைத்திற்கும் மண்ணாகிவிடும்படி கட்டளையிடப்படும்.

இந்த காட்சியைக்காணும் நம்பிக்கையற்றோர், ".......மேலும் கா.ஃபிர் “அந்தோ கைசேதமே! நான் மண்ணாகிப் போயிருக்க வேண்டுமே!” என்று (பிரலாபித்துக்) கூறுவான். (அல் குர்'ஆன் அத்தியாயம் 78, வசனம் 40)

மற்ற அனைத்து பொருள்களும் உயிரினங்களும் மண்ணாகப்போகும் பொழுது, மனிதனும், ஜின் வம்சமும் கேள்விக்கு ஆளாக்கபட்டு, அவரவர் செய்கைகளுக்கு பொறுப்பாளியாகி, அதற்கு ஏற்றார் போல், நிரந்தரமாக நரகத்தின் வேதனையில் பரிதவிப்பர் அல்லது சொர்க்கத்தின் வாழ்க்கையை அனுபவிப்பர்.

உனக்கு இப்பொழுது தெளிவாகியிருக்கும் என நான் நம்புகிறேன்.

சொர்க்கம், நரகத்தைப்பற்றி இன்னும் அறிந்துகொள்ள வேண்டுமாயின், இந்த இணைய தளத்தின் (இஸ்லாம் ஆன்லைன்) "Let Us Make A Start" என்ற தலைப்பில், "Life Of Hereafter" என்ற என் கட்டுரையை படித்துப்பார்.

சாந்தியும், அடையாளம் கொள்ளும் புன்னகையுடன்